## தலைப்பு 135 - பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 16 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தெம்பர் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) இந்த அறிக்கையின் 2.3(அ) மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் குகறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் போதும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆம் ஆண்டில் 249,843 ஹெக்டேயர் பரப்பளவுள்ள அரச காணிகள் 23 பெருந்தோட்ட கம்பனிகளுக்கு 53 வருட காலப்பகுதிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. அந்த கம்பனிகளில் 09 கம்பனிகளிடமிருந்து அரசுக்கு மீள அறவிட வேண்டிய ரூபா 886,412,196 தொகையான குத்தகை வருமானம் 2021 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்டது மற்றும் நிதி ஒழுங்கு விதி 176(2) இன் பிரகாரம் திறைசேரியுடன் இணைந்து நிலுவை வருமானத்தினை தாமதமின்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுதிறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் தலைமையில் தொடர்புடைய பெருந்தோட்ட கம்பனிகளுடன் கலந்துரையாடலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது மற்றும் குத்தகை வாடகை நிலுவைகளை செலுத்துமாறு அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அதிகூடிய வருமான நிலுவைத் தொகையினை கொண்ட கொட்டகலை பெருந்தோட்ட கம்பனி 2017 ஆம் ஆண்டு முதல் குத்தகை வாடகைகளின் கொடுப்பனவு செய்ய தவறிருந்தது மற்றும் அதன் காரணமாக குத்தகை வழங்குனர்களான இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை என்பவர்களுக்கு வருமான நிலவைகளை மீள அறவீடு செய்வதற்காக சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்த பின்னர் சட்ட நடவடிக்கையினை ஆரம்பிப்பதற்கு 2021 ஆகஸ்ட் 04 அன்று எழுத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. | வருமான நிலுவைகளை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1995 நவம்பர் 27 அன்று குருநாகல் பெருந்தோட்ட கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்ட 1558 ஆம் இலக்க திருத்தம் செய்யப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், அந்தத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தேறிய சொத்துக்களின் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட குத்தகை வாடகையானது 53 வருடங்களின் போது வருடத்திற்கு நான்கு சமமான தவணைகளில் செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும் தேறிய சொத்துக்களின் அடிப்படையில் வருடத்திற்கு செலுத்த வேண்டிய குத்தகை வாடகையை விட குறைவாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனால் 2021 திசம்பர் 31 இல் உள்ளவாறு குருநாகல் பெருந்தோட்ட கம்பனியிடம் இருந்தான ரூபா 255,112,417 நிலுவையொன்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதில் 05 வருட காலப்பகுதிக்கு மேலான ரூபாய் 116,801,733 தொகையான நிலுவையொன்று அவதானிக்கப்பட்டது. இந்த கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் செய்யப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் 2(அ) பந்தியின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவை திகதியில் குத்தகை வாடகையினை தொடர்ச்சியாக செலுத்துவதற்கு கம்பனி உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட நிபந்தனை பல வருடங்களுக்கு மேலாக மீறப்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையின் 5(இ) பந்தியின் பிரகாரம், 07 நாட்களுக்குள் விளம்பர அறிவித்தலொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குத்தகை ஒப்பந்தத்தினை ரத்து செய்ய முடியும் என்ற போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குருநாகல் பெருந்தோட்ட கம்பனி அவர்களால் பின்பற்றப்படும் முறையின் கீழ் குத்தகை வாடகையினை தொடர்ச்சியாக செலுத்தியுள்ளது மற்றும் கொடுப்பனவு செய்யத் தவறியிருக்கவில்லை. தேறிய சொத்துக்களின் திருத்தப்பட்ட பெறுமதியின் அடிப்படையிலான முறையொன்றின் கீழ் குத்தகை வாடகையினை குருநாகல் பெருந்தோட்ட கம்பனி செலுத்தியிருந்தது மற்றும் அதற்கமைவாக மதிப்பிடப்பட்ட தொகையை விட குறைவான தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய குத்தகை வாடகையில் ஆகக் குறைந்தது ஒரு பகுதியையாவது குறிப்பிட்ட கம்பனி செலுத்துவதன் காரணமாக பந்தி 5 (இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியுமா என சட்டமா அதிபரிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும் | வருமான நிலுவைகளை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான கூற்றில் 20 சதவீதத்தைக் கொண்ட உப குத்தகையுடன் தொடர்புடைய உண்மையான மதிப்பீடுகளின் பெறுமதி உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை மற்றும் உபகுத்தகையின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானமாக ரூபா.10,007,674 தொகையொன்று மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் உப வாடகைக்கு வழங்கிய 09 நிறுவனங்களிடம் இருந்தான நிலுவைகள் ரூபா 2,656,509 தொகையொன்றாக காணப்பட்டதுடன் மற்றும் அந்த பெறுமதி வருமான நிலுவைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | வருமான நிலுவைக் கூற்றில் குத்தகை நிலுவைகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 08 விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 124,801,000 தொகையான மொத்த ஏற்பாட்டில் ரூபா 33,515,850 மொத்த தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதிக்குள் சம்பந்தப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய தேறிய ஏற்பாட்டில் 17 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை குறிப்பிடத்தக்க வீச்சுக்குள் சேமிப்புகள் காணப்பட்டன என்று அவதானிக்கப்பட்டது எனவே யதார்த்தமான முறையில் செலவின மதிப்பீட்டை தயாரிப்பதில் அமைச்சினது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் முறையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் 05 விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 102,730,000 தொகையான மொத்த ஏற்பாட்டில் ரூபா 22,993,000 மொத்த தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதிக்குள் சம்பந்தப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை குறிப்பிடத்தக்க வீச்சுக்குள் சேமிப்புகள் காணப்பட்டன என்று அவதானிக்கப்பட்டது எனவே யதார்த்தமான முறையில் செலவின மதிப்பீட்டை தயாரிப்பதில் அமைச்சினது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் முறையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

**2.3 அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவறான அமைச்சின் புத்தகங்களுக்கும் திறைசேரியின் புத்தகங்களுக்கும் இடையில் வேறுபாடாக காணப்பட்ட அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 56,769 தொகையினை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்காண்பதன் மூலம் தீர்க்கப்படல் வேண்டும் |
| (ஆ) | அமைச்சிற்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 06 மாதங்கள் முதல் 31 வருடங்களைக் கொண்ட காலப்பகுதிக்கிடையே மீள அறவிடப்படாமல் காணப்படும் மொத்த கடன் மீதியான ரூபா 140,868 தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 20 வருட காலப்பகுதிக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாத இந்த கடன் மீதிகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அவர்களின் விவரங்களை கண்டறிய முடியவில்லை. | கடன் மீதிகள் விரைவாக தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும் |
| (இ) | பணி இடைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 07 வருடங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக மீள அறவிடக்கூடிய ரூபா 41,790 மீதி ஒன்றினை உள்ளடக்கிய ரூபா 440,301 மொத்த மீதியினையும் 03 உத்தியோகத்தர்களிடமிருந்தான 12 மற்றும் 24 வருடங்களுக்கு இடைப்பட்ட | பணி இடைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது 03 உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகியிருந்தனர் மற்றும் அவர்களில் ஒரு | கடன் மீதிகள் விரைவாக தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதி ஒன்றிற்காக மீள அறவிடக்கூடிய ரூபா 398,511 மீதியொன்றினையும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தரின் ஆதனக் கடன் மீதியினை மீள அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு சொந்தமான காணியினை ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. உத்தியோகத்தரொருவர் இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக அவரது கடன் மீதியினை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஏனைய உத்தியோகத்தரின் கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து மீள அறவிட வேண்டிய ரூபா 133,569 தொகையினை 02 வருடங்களாகியும் கூட மீள அறவிட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தரின் கோவை பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | கடன் மீதிகள் விரைவாக தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்ண்டில் ஹொலுவாகொட சூழல் நேய பெருந்தோட்ட பூங்கா நிகழ்ச்சி திட்டத்தின் அபிவிருத்திக்காக அமைச்சு ரூபா 100,000,000 ஏற்பாடு ஒன்றினை குறை நிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் செய்திருந்தது. இந்தப் பூங்காவினை இரண்டு கட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது மற்றும் அதன் மீது ரூபா 98,193,915 ற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2022 யூன் 30 அன்று பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2022 யூன் 30 இல் மொத்த செலவு ரூபா 76,524,519 ஆக இருந்தது மற்றும் இந்த நிர்மாணிப்புக்களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் போது பூர்த்தி செய்ய முடியவில்லை. | ஒப்பந்தத்தினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு (UDA) எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் போது அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சுக்கு சொந்தமான ரூபா 6,090,000 கிரயத்திலான PC-6259 இலக்கத்தை கொண்ட கேப் (Cab) வாகனம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இரண்டு முறை பதிவு செய்யப்பட்டிருந்தது. | இந்த வருடத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் பதிவேடு சரிசெய்யப்படல் வேண்டும். |
| (ii) | பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 43,000,000 கிரயத்திலான ஐந்து மோட்டார் வாகனங்கள் ஏலமிடப்பட்டிருந்தன மற்றும் குறிப்பிட்ட பெறுமதி நிதியல்லா சொத்துக்களின் கூற்றிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | சொத்துக்களின் கூற்று சரி செய்யப்படல் வேண்டும். |
| (iii) | அமைச்சினால் தற்போது பயன்படுத்தப்படும் 05 மோட்டார் வாகனங்களினதும் ஜனாதிபதி செயலகத்திடமிருந்து அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற 03 மோட்டார் வாகனங்களினதும் கிரயம் நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | சொத்துக்களின் கூற்று சரி செய்யப்படல் வேண்டும். |
| (iv) | அமைச்சினதும் நிதி அமைச்சினதும் அதிகார வரம்பின் கீழ் காணப்படும் இலங்கை அரச பெருந் தோட்ட கூட்டுத்தாபனம், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம் என்பவற்றை உள்ளடக்கிய நிறுவனங்களுக்கு ரூபா 215,790,000 கிரயத்திலான 26 மோட்டார் வாகனங்களை அமைச்சு வழங்கியிருந்த போதிலும் அந்த வாகனங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | சொத்துக்களின் கூற்று சரி செய்யப்படல் வேண்டும். |

## 3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி ஒழுங்கு விதி 880(i) மற்றும் அரச உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளை சட்டத்தின் அத்தியாயம் 612 இன் பிரகாரம் பிணைப் பாதுகாப்பினை வழங்குவதற்கு அவசியமான உத்தியோகத்தர்களினை இனங்காண்பதன் மூலம் பிணையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை மேலும், நிதி ஒழுங்கு விதி 891(i) இன் பிரகாரம் ஊழியர்களின் பிணைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பிணைப் படிவங்கள் 2022 பெப்ரவரி 03 அன்று அரசாங்க சேவை பரஸ்பர உத்தரவாத சங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன மற்றும் அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ள தெரிவித்து அந்த பிணைப் படிவங்கள் உத்தரவாத சங்கத்தினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. மேலும் மேற்படி திருத்தம் செய்யப்பட்ட பிணைப் பத்திரங்களை உத்தரவாத சங்கத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையான காலப்பகுதியினை கடந்திருந்த போதிலும் 09 நிகழ்வுகளுடன் தொடர்புடைய கூட்டு மொத்தமான ரூபாய் 5,092,692 நட்டங்கள் அல்லது சேதங்களினை மீள அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பு செய்வதற்கு மீளாய்வாண்டின் திசம்பர் 31 வரையிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நட்டங்கள் மற்றும் சேதங்களை மீள அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளின் எண்ணிக்கை 593 ஆக இருந்தது மற்றும் அவற்றில் 147 வெற்றிடங்களும் 03 மேலதிகமான பதவியணிகளும் காணப்பட்டன. அதற்கமைவாக வெற்றிடங்களை தகுந்த முறையில் நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |